DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.11**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | துரைபாண்டியன் |
| Father Name | : | நல்லகண்ணு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2026.

( 1, 2, 4 எதிரிகள் ஆஜர். 5 மற்றும் 6 வது எதிரிகள் ஆஜர் இல்லை. 5 மற்றும் 6 வது எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை உயர்நீதிமன்ற காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னதாக 03.01.2016ம் தேதி மதுரை மாநகர் திடீர்நகர் காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, **அ.சா.10** சார்பு ஆய்வாளர் செல்வராஜ் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 பாண்டிச்சாமி தலைமை காவலர் 308 என்பவர் பகல் 01.15 மணிக்கு எதிரிகள் கணேசன், நாராயணன், மணிகண்டன், கந்தசாமி மற்றும் சக்திவேல் ஆகியோர்களையும் **சா.பொ.1** உடைந்த கேமரா ஒன்றையும் ஆஜர் செய்த எழுத்துபூர்வமாக கொடுத்த **அ.சா.ஆ.1** புகார் மனுவை பெற்று அப்புகாரின் தன்மைக்கேற்ப திடீர்நகர் காவல்நிலைய குற்ற எண்.7/2016 பிரிவுகள் 147, 148, 188, 294(b), 332, 336, 353, 506(ii) இ.த.ச மற்றும் 3(1) TNPPDL Act ன் படி வழக்கு பதிவு செய்து **அ.சா.ஆ.5** அசல் முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் எண்.5 மதுரைக்கு அனுப்பி வைத்தும், எனது புலன்விசாரணைக்காக முதல் தகவல் அறிக்கையை என் பார்வைக்கு வைத்தார். மேற்படி என்னிடம் ஆஜர் செய்த உடைந்த **சா.பொ.1** கேமராவை படிவம் 91

மூலம் பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அந்த படிவம் 91 (எண்ணம் 2) **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர்படுத்தப்பட்ட எதிரிகளை நிலைய காவலில் வைத்துவிட்டு, சம்பவ இடமான பெரியார் பேருந்துநிலையம் கட்டபொம்மன் சிலை அருகே சென்று பகல் 02.30 மணிக்கு **சாட்சி எண்.10** திருப்பதி மற்றும் **அ.சா.8** மாதுகண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த  மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சம்பவ இடத்தில் காணப்பட்ட **சா.பொ.3** மோட்டார் வாகனம் TN 65 E 2325 என்ற டாடா சுமோ வாகனத்தையும் சம்பவ இடத்தில் காணப்பட்ட சாட்சியால் அடையாளம் காணப்பட்ட **சா.பொ.2** மூன்று கருங்கற்களையும் மாலை 03.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் **சாட்சி எண்.10** திருப்பதி மற்றும் **அ.சா.8** மாதுகண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து சான்றுபொருட்களை கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்றுபொருட்களை **அ.சா.ஆ.6** படிவம் 91 மூலம் நீதித்துறை நடுவர் எண்.5 மதுரைக்கு அனுப்பிவைத்தேன். அன்றைய தினம் சம்பவ சாட்சிகளான **அ.சா.1** பாண்டிச்சாமி தலைமை காவலர் 308, **அ.சா.2** காவல் உதவி ஆணையர் திரு.மலைக்குமார், **அ.சா.3** காவல் உதவி ஆணையர் பீர்முகைதீன், **அ.சா.4** தலைமை காவலர்  118 சங்கர நாராயணன், **அ.சா.5** தலைமை காவலர் 237 கிங்ஸ்லி, **அ.சா.6** தலைமை காவலர் 1674 முருகன், **அ.சா.7** பிரதீப், **அ.சா.8** மாதுக்கண்ணன் மற்றும் **அ.சா.10** சார்பு ஆய்வாளர் செல்வராஜ் **சாட்சி எண்**.4 சிறப்பு சார்பு ஆய்வாளர் ரவிச்சந்திரன்,  **சாட்சி எண்**.8 முருகன்,  **சாட்சி எண்**.10 திருப்பதி  ஆகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினம் மாலை 03.30 மணிக்கு காவல்நிலையத்தில் ஆஜரில் இருந்த எதிரிகள் கணேசன், நாராயணன், மணிகண்டன், கந்தசாமி மற்றும் சக்திவேல் ஆகியோர்களை கைது செய்து திரேக பரிசோதனை செய்து

நிலைய பாரா காவலர் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு 10.01.2016ம் தேதி இவ்வழக்கின் சேதமடைந்த கேமராவை ஆய்வு செய்து சேதமதிப்பு வழங்கிய **அ.சா.9** கணேசன் என்பவரிடம் **அ.சா.ஆ.4** சேத மதிப்பு சான்று பெற்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 24.05.2016ம் தேதி இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த எதிரி வீரக்குமார் என்ற மதுரை வீர போயன் என்பவரை தகவலின் பேரில் மதுரை ஒத்தக்கடை நரசிங்க பெருமாள் கோவில் அருகே வைத்து காலை 07.45 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு 18.06.2016ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் **அ.சா.1** பாண்டிச்சாமி, **அ.சா.3** பீர்முகைதீன், **அ.சா.2** திருமலைக்குமார் மற்றும் **சாட்சி எண்.4** ரவிச்சந்திரன் ஆகியோர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் **சாட்சி எண்.13** ஜெயராஜ் என்பவரிடம் தனி தனியாக காயச்சான்று பெற்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி காயச்சான்றிதழ்கள் ( எண்ணம் 4) **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அன்றைய தினத்தில் காயச்சான்றின் தன்மையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 147, 148, 188, 294(b), 332, 336, 353, 506(ii) இ.த.ச மற்றும் 3(1) TNPPDL Act என்ற பிரிவில் இருந்து 147, 148, 188, 294(b), 332, 333, 336, 353, 506(ii) இ.த.ச மற்றும் 3(1) TNPPDL Act என்று சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்ட மாறுதல் அறிக்கையை நீதித்துறை நடுவர் எண்.5 மதுரை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் 18.06.2016ம் தேதி வழக்கின் விசாரணையை முடித்து பிரிவுகள் 147, 148, 188, 294(b), 332, 333, 336, 353,

506(ii) இ.த.ச மற்றும் 3(1) TNPPDL Actன் படி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.01.08 16:02:19 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.